# உங்கள் தனிப்பட்ட பாதுகாப்புக் குறித்துக் கவலைப்படுகிறீர்களா?

---

**வாக்காளர் பட்டியலில் தங்கள் விவரங்களை வெளிப்படையாக வைத்திருப்பதை எல்லோருமே போதியளவு பாதுகாப்பாகக் கருதுவதில்லை, ஆனால் இது அவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை இழக்கிறார்கள் என்று அர்த்தம் இல்லை.**

உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு அல்லது உங்கள் குடும்பத்தின் பாதுகாப்புக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், ரகசியமான வெளியிடப்படாத பட்டியலுக்குச் செல்ல நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் சேர்க்கை விவரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும், யாருக்கும் வழங்கப்படாது.

# உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு பற்றிக் கவலையா?

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI



vote.nz
0800 36 76 56

ROE47B 23/04/20_Yamil

## எனது தனிப்பட்ட விவரங்கள் மாறினால் என்ன செய்வது?

நீங்கள் வெளியிடப்படாத பட்டியலில் சேர்ந்ததும், உங்கள் பெயர் அல்லது முகவரி போன்ற பதிவு விவரங்கள் மாறினால், எங்களுக்குத் தெரியப்படுத்தவும். புதிய சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து எங்களிடம் திருப்பித் தருவதன் மூலம் நீங்கள் அதைச் செய்யலாம். உங்கள் வசிப்பிடம் மாறினால், பொதுவில் கிடைக்கும் பட்டியலுக்குத் திரும்பிச் செல்லக் கோரலாம்.

ஏதேனும் மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்றால், உங்கள் உள்ளூர் வாக்காளர் பதிவாளரைத் தொடர்பு கொள்ளவும் அல்லது **unpublished.roll@elections.govt.nz** என்ற மின்னஞ்சலில் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## வெளியிடப்படாத பட்டியலில் நான் இருந்தால், எவ்வாறு வாக்களிப்பது?

பொதுத் தேர்தல் அல்லது இடைத்தேர்தல் என எங்கு நடந்தாலும் நீங்கள் வாக்களிக்கலாம். வாக்களிக்கும் இடத்தில் வாக்களிப்பு ஆவணங்களை வெளியிட பயன்படுத்தப்படும் அச்சிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் உங்கள் விவரங்கள் இருக்காது என்பதால், சிறப்பு வாக்கை நீங்கள் அளிக்க வேண்டியதிருக்கும்.

எந்த இடத்தில் வாக்களிப்பதற்கு நீங்கள் பதிவுசெய்யப்பட்டீர்கள் என்பதை உறுதிப்படுத்த, உங்கள் வாக்குச் சீட்டுடன் கூடுதல் படிவத்தையும் நீங்கள் நிரப்ப வேண்டியதிருக்கும். நீங்கள் விரும்பவில்லை எனில், படிவத்தில் முகவரி அல்லது முந்தைய பெயர் தகவலை நீங்கள் நிரப்ப வேண்டியதில்லை. இருப்பினும், இந்தத் தகவலை வழங்குவது வாக்களிப்பதற்கான உங்கள் தகுதியை உறுதிப்படுத்த எங்களுக்கு உதவும். நீங்கள் வாக்களிக்கும் இடத்திற்கு வரும்போது, என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்பிக்க யாராவது ஒருவர் இருப்பார்கள்.

உள்ளூர்த் தேர்தல்களில் வாக்களிக்க, வாக்குச் சீட்டை உங்களுக்கு அனுப்ப உங்கள் உள்ளூர் அவையில் தேர்தல் அதிகாரியிடம் கேட்கவேண்டும்.

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

## வெளியிடப்படாத பட்டியலில் பதிவு செய்ய எவ்வாறு விண்ணப்பிப்பது

வெளியிடப்படாத பட்டியலில் பதிவு செய்யவதற்கு விண்ணப்பிக்க, இந்தச் சிற்றேட்டில் இணைக்கப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பவும்:

நீங்கள் ஏற்கனவே பதிவுசெய்யவில்லை என்றால் அல்லது உங்கள் விவரங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்றால், அதற்கும் பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பதிவுப் படிவத்தைப் பெற, இந்த இரண்டு விருப்பங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்:

- **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும், நாங்கள் உங்களுக்கு ஒரு பதிவுப் படிவத்தை அனுப்புவோம்
- பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்ப **vote.nz** இல் பதிவுப் படிவத்தைப் பதிவிறக்கவும்.

## நான் என்னென்ன தகவலைச் சேர்க்க வேண்டும்?

வெளியிடப்படாத பட்டியலில் ஏன் பதிவு செய்கிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்தும் தகவலை நீங்கள் வழங்க வேண்டும். சேர்க்கக்கூடிய தகவலின் உதாரணங்கள் சில இங்கே வழங்கப்பட்டுள்ளன. (விண்ணப்பிக்க இந்த வகையான தகவல்கள் அனைத்தும் உங்களுக்குத் தேவையில்லை.)

- உங்கள் வேலை அல்லது தனிப்பட்ட சூழ்நிலைகள் உங்களுக்கு ஏன் ஆபத்தை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்கும் கடிதம். இந்தக் கடிதம் உங்கள் முதலாளி, வழக்கறிஞர், சமூக சேவகர், வக்கீல் அல்லது இதே போன்று சமூகத்தில் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட ஒருவரிடமிருந்து இருக்கலாம்.
- குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் 1995 இன் கீழ் அமலிலுள்ள பாதுகாப்பு ஆணையின் நகல்.
- துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் 1997 இன் கீழ் அமலிலுள்ள தடை ஆணையின் நகல்.
- உங்கள் பெயர் மற்றும் முகவரியை வெளியிடுவது ஏன் உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்கோ ஊறு விளைவிக்கக் கூடும் என்பதை விளக்கும் ஒரு போலீஸ் அதிகாரி அல்லது திருத்த அலுவலரின் தகவல்.

# Complete this form to apply to go on the unpublished roll.

**Full name:**

**Date of birth:**

**Contact phone number:**

**Email:**

**Address where you are enrolled to vote or have applied to enrol:**

**List the information provided to support your application:**

✓ **Please tick one of the following:**

- ☐ **I am already enrolled to vote**
- ☐ **I am not enrolled and I have enclosed a completed enrolment form**

**Signature**

**Date**

Complete and return to Electoral Commission,
**PO Box 190, Wellington 6140**

Remember to return any information that supports your application to register on the unpublished roll.

For more information visit **vote.nz**